2009 ஜூலை 3]

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே சிற்றாறு-1, சிற்றாறு-2 என்று இரண்டு அணைக்கட்டுகள் இருக்கின்றன. அங்கே 2* Guest Houses *இருக்கின்றன. அந்த* Guest Houses-*லே ஒன்று, 'சிவலோகம்'; மற்றொன்று 'வைகுந்தம்'. (சிரிப்பு) (குறுக்கீடு) நான் வைத்த பெயர் அல்ல; அது நீண்ட நாட்களாக இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 84, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.*

திரு. டி. சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைகுந்தத்திற்குப் போகப் போகிறாரா அல்லது சிவலோகத்திற்குப் போகப் போகிறாரா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.*

84—

சிட்டா நூல்

***56713—திருமதி ஜி. லதா:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் கைத்தறி நெசவாளர்களுக்குச் சிட்டா நூல் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜூலை 3

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் பகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், குடியாத்தம் பகுதியில் 5 நூல் கிட்டங்கிகளும், ஆரணியில் 4 நூல் கிட்டங்கிகளும் மற்றும் திருவண்ணாமலையில் 2 நூல் கிட்டங்கிகளும் என குடியாத்தம் மற்றும் அதன் அருகில் தற்போது 11 நூல் கிட்டங்கிகள் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில் உற்பத்தி செய்யப்படுகின்ற லுங்கி, இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது; இலங்கை, பர்மா, இந்தோனேஷியா போன்ற வெளி நாடுகளுக்கும் அனுப்பப்படுகிறது. சிறப்பு வாய்ந்த இந்தத் தொழிலில், இன்றைய காலகட்டத்தில் மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலில் ஏறத்தாழ 75 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். முதன்முதலில் தேசியக் கொடியை நெய்து அளித்த தொகுதி, குடியாத்தம் தொகுதி. ஆனால், அந்தத் தொகுதியில் இருந்த சிட்டா நூல் கிடங்கு மூடப்பட்டுவிட்டது. வேலூர் மாவட்டத்தில், அரக்கோணம், வேலூர், குடியாத்தம் ஆகிய மூன்று இடங்களில் இருந்த கிடங்குகள் மூடப்பட்டுவிட்டதால், தொலைவில் இருக்கின்ற காஞ்சிபுரத்திற்குத்தான் சென்று வர வேண்டும். நெசவுத் தொழில் செய்கின்ற தொழிலாளிகள் வெகு தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது. நூல்களையும் எடுத்து வருவதில் சிரமம் இருக்கிறது. இந்தச் சிரமங்களைத் தவிர்த்து, தொழில் சிறப்பாக நடக்க, சிட்டா நூல் கிடங்குகளை குடியாத்தம் தொகுதியில் அமைக்க அரசு முன்வருமா என்பதனைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக, இந்தச் சிட்டா நூல் விற்பனை நிலையத்தை அமைக்க, 'ஆலை வாயில் திட்டம்' என்ற திட்டத்தை நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய பகுதியிலே மட்டும் கடந்த 3 மாதக் காலத்திலே மட்டும் ஏறத்தாழ 63 இலட்சம் ரூபாய்க்கு வியாபாரம் நடந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய

2009 ஜூலை 3]

கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலித்து, அங்கே புதிதாக அரசின் சார்பாக அப்படிப்பட்ட கிடங்குகளை ஆரம்பிக்க முடியுமா என்பதை ஆராய்ந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.*

திருமதி ஜி. லதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்டா நூல் கிலோ ஒன்றுக்கு 15 ரூபாய் தள்ளுபடி பெரியவர் திரு. வி.பி. சிங் காலத்தில் அளிக்கப்பட்டது; பின்னர் அது நிறுத்தப்பட்டது. மீண்டும் உங்களுடைய ஆதரவோடு மத்திய சர்க்கார் செயல்பட்டுக் கொண்டிருப்பதால், அவர்களுக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிற நம்முடைய அரசு, சிட்டா நூலுக்கு, மீண்டும் கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய் மானியம் அளிக்கச் செய்து, அந்தத் தொழிலைச் சிறப்பாக நடத்துவதற்கும், அந்தத் தொழிலைப் நசிவிலிருந்து பாதுகாக்குமா? குடியாத்தத்தில் இந்தக் கிடங்கினை ஏற்படுத்தினால், தனியார் நூற்பாலைகளிலிருந்து வரும் தரமான நூல்கள் இந்தக் கிடங்கின்மூலம் விற்கப்படுமா? அதை அரசு செய்து கொடுக்க முன்வருமா என்பதனைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நின்றுபோன அந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வருவதற்கு வேண்டிய முயற்சியை அரசு மேற்கொண்டு, மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி, தொடர்ந்து முயற்சிகள் எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் மில்களிலேயிருந்துதான் நம்முடைய கிடங்குகளுக்கு இப்போது நூல்கள் வாங்கிக் கொண்டிருக்கிறோம். குறிப்பிட்ட மில்களிலிருந்தும், தகுதிவாய்ந்த நிறுவனங்களின்மூலமாகவும், கிடங்குகளுக்கு நூல்கள் வந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அது தங்களுடைய பகுதியின் தேவைக்கு ஏற்றபடி இல்லை என்ற கருத்திலே இருக்கிறார் என்று நினைக்கின்றேன். தேவைக்கேற்ப புதிய கிடங்குகளை அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.*

திரு. ஆர். சிவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் அதிகப்படியாகப் பட்டு நெசவாளர்கள் இருக்கிற காரணத்தால், அத்தியாவசியமான பட்டினை, சீனா போன்ற வெளிநாடுகளிலிருந்து கொண்டு வந்து, திருவண்ணாமலை மாவட்டத்தில் விற்பனை செய்யவும், அங்கு உற்பத்தியாகின்ற பட்டாடைகளை விற்பனைச் செய்வதற்காகவும், பட்டு விற்பனை மையம் ஒன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கங்களுக்கெல்லாம் டான்சில்க் 'மூலமாகத்தான்' பட்டு வாங்கிக்கொண்டிருக்கிறோம். இப்போது அந்நிறுவனமும் அனேகமாக வெளிநாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்து எங்களுக்கு சப்ளை செய்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை எந்த அளவிற்கு சாத்தியம் என்பதைப் பார்த்து, ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு, மத்திய அரசின் ஆறாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றியிருக்கிறது. கைத்தறி நெசவாளர்கள் வறுமையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் 10 சதவிகித கூலி உயர்வு அல்லது 10 சதவிகித அகவிலைப்படி உயர்வு அளிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1-6-2008-ல்தான் 10 சதவிகித கூலி உயர்வு கொடுத்திருக்கிறோம். இப்பொழுதும் நெசவாளர்கள்

மத்தியிலே கூலி உயர்வு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசினுடைய பலிசீலனையிலே அந்தக் கருத்து இருந்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெ. நெடுஞ்செழியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

85—

கட்டட வசதி

***31597—திரு. ரெ. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, குன்னன்டார் கோயில் ஒன்றியம், தெம்மாவூர் ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, குன்னன்டார் கோயில் ஒன்றியம், தெம்மாவூர் ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ், திட்டம் 9-ல் கூடுதலாக 11 வகுப்பறைகள் கட்ட ரூ.55.33 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை (நிலை) எண் 221, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11-11-2008-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெ. நெடுஞ்செழியன்.

திரு. ரெ. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது புதுக்கோட்டை தொகுதியில் கந்தர்வக்கோட்டை தாலுகா, வேளாடிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் 600 மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். இவர்கள் படிப்பதற்கு இந்தப் பள்ளியிலே 2 வகுப்பறைகள் மட்டுமே இருக்கின்றன. இந்தப் பள்ளியில் மாணவ, மாணவிகள் அனைவரும் காலையிலிருந்து மாலைவரை மரத்தடியிலே அமர்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலை